**நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்றிட்டம் - 2015**

நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்றிட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இலங்கை மின்சார சபைக்கும் (சீஈபீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2011 யூன் 20 ஆந் திகதிய 2733 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) மற்றும் 2734 - எஸ்ஆர்ஜ(ஈஎவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(அ) மற்றும் 4.03(அ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

செயற்திட்ட கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளினதும் 09 மற்றும் 10 ஆம் பகுதிகளினதும் அமுலாக்கல் முகவராக காணப்படுகின்ற அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதிகள் 07 மற்றும் 08 இனை அமுல்படுத்தும் முகவராக உள்ளது. நம்பகரமான, போதியளவான மற்றும் வசதியான மின்வலு வழங்கலின் இடப்பரப்பை விஸ்தரித்தல் மற்றும் (i) கிழக்கு, வட மத்தி, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மின்பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்துதல் (ii) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பின்தங்கிய கிரமங்களிற்கு மின்சாரம் வழங்குதல் (iii) எரிசக்தி வினைத்திறன் முன்னேற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை மேலும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக சேவை வழங்கலின் வினைத்திறனையும் நம்பகத் தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன.

2010 ஒக்தோபர் 06 ஆந் திகதிய செயற்திட்ட நிர்வாக கையேட்டின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 18,135 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 162.03 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் 74 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 13,427.64 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 120 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2011 நவம்பர் 17 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலப்படுத்தப்பட்டதுடன் கடன் முடிவடையும் திகதி 2016 ஒக்தோபர் 30 என பட்டியலப்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடிந்திருந்ததா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து ஏற்படுகின்ற செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதிலான தாமதங்கள்

2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள், 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் ரூபா 48.99 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ஏழு வாகனங்கள் மீளாய்வாண்டில் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் நடைபெற்று வரும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், இலங்கை மின்சார சபை உள்நாட்டுக் கட்டணங்களை செலுத்தியமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 14.13 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய 07 வாகனங்கள் கணக்கிற்கு கொண்டவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீள்செயற்பாட்டு மின்வலு முகாமைத்துவத்தின் கீழ் செய்யப்பட்ட ரூபா 196.90 தொகையான வேலைகளின் பெறுமதி வகைப்படுத்தல் வழுவொன்று காரணமாக புதிய காலி மின்வலு பரிமாற்றல் அபிவிருத்தி வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 2733 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழான ரூபா 9,043 மில்லியன் கடன் கிடைப்பனவுகளின் மீளளித்தல்கள் வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 9,177.58 மில்லின் நேரொத்த செலுத்துகைகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,067.67 மில்லியன் செலுத்துகைகள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,789.22 மில்லியன் செலுத்துகைகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கை களில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்ப ட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஏடீபீ | 118.07 | 13,223.84 | 1,863.00 | 12.60 | 1,789.00 | 70.40 | 9,999.00 |
| ஜீஓஎஸ்எல் | 42.03 | 4,707.36 | - | - | - | - | - |
| சீஈபீ | - | - | 208.00 | 3.60 | 513.00 | 13.40 | 1,899.00 |
| மொத்தம் | **160.10** | **17,931.20** | **2,071.00** | **16.20** | **2,302.00** | **83.80** | **11,898.00** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, புதிய காலி மின்வலு பரிமாற்றம், வடக்கு கிழக்கு மின்வலு பரிமாற்றம், கிழக்கு மாகாண விநியோக இயலளவு அபிவிருத்தி மற்றும் மொரகொல்ல நீர் மின்வலு நிலைய அபிவிருத்திகளின் கீழான வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், வேலைகள் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டமை காரணமாக கிரிபத்கும்புர உபமின் நிலையத்தின் விஸ்தரித்தல் ஆரம்ப கட்டத்திலேயே காணப்பட்டது. மேலும், கிழக்கு மாகாண விநியோக இயலளவு அபிவிருத்தி நோக்கத்திற்காக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த சிறப்புப் பயன்பாட்டு வாகனங்கள், வழங்குனரின் இயலாமை காரணமாக பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஊவா மாகாணத்தின் ஹல்துமுல்ல மற்றும் ராகலை பிரதேசங்களில் நடுத்தரளவு வோல்டேஜ் விநியோக முறைமையினை பலப்படுத்தல் செயற்பாடுகளை காணிச் சுவீகரித்தலில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக பூரணப்படுத்த முடியாது போயிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

ஒப்பந்த காரர்களினால் செலுத்தப்பட்ட ரூபா 8.93 மில்லியன் தொகையான வருமான வரிகள் கடன் உடன்படிக்கைகளின் 1.10 ஆம் பிரிவிலுள்ள விசேட நிபந்தனைக்கு முரணாக செயற்திட்டத்தினால் மீளளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.